# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,043 — 1934 ம் ஹு சித்திரைமீ 12 ந் திகதி, வியாழக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### காணி நிர்ணய முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நி. 751 (கண்டி).

இதனோடிணைந்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சொந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1934 ம் ஆண்டு (எப்றில்) சித்திரைமீ 12 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச்சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1934 ம் ஆண்டு (மார்ச்) பங்குனிமீ 16 ந் திகதியிலன்று கண்டிக் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

டீ. சீ. ஆர். குணவர்தன,
உதவி அரசாட்சி ஏஜன்ற், கண்டி.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும்மேலதிகமான விபரம் மத்திய மாகாண அரசாட்சி ஏசண்டரிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.
(b) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

மத்திய மாகாணம், கண்டி டிஸ்திறிக், பாதஹேவகெத்த டிவிசன், கந்தாகெ கோறளை தெறகில் கப்புலியத்த கிராமத்திலுள்ள பின்வருங் காணித்துண்டுகள் :—

பிரதமபடம் இல. 8,145.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 5 | கப்புலியத்தெபத்தன .. .. | 2 | 0 | 11 |
| 7 | ஷை .. .. | 16 | 2 | 12 |
| 7A | ஷை (இடுகொட்டோடு சேமித்தது) .. | 0 | 3 | 0 |
| 8 | ஷை .. .. | 0 | 3 | 14 |
| 9 | ஷை .. .. | 10 | 0 | 10 |
| | | 30 | 1 | 7 |

எல்லைகள் : வடக்கு-அ. ரு. ரு. நாச்சியப்பர் உடையாரால் உரித்தாடப்படும் மீனாட்சிதோட்டம் அல்லது உடையாரம் தோட்டம், எஸ் எம். நாறணியால் உரித்தாடப்படும் கமடிவெலாவத்த அ. ரு. ரு. நாச்சியப்பர் உடையாரால் உரித்தாடப்படும் மீனாச்சிதோட்டம் அல்லது உடையாரம் தோட்டம், உரிமைப்படம் 356,717 ல் விவரிக்கப்பட்டிருக்கும் நிலம், ரி. பந்துவாலும் பிறராலும் உரித்தாடப்படும் கப்புலியத்தெபத்தனகேன ; கிழக்கு-டி. எம். அப்புகாமியால் உரித்தாடப்படும் கப்புலியத்தெபத்தனகேன, எ. கிரிகாமியாலும் பிறராலும் உரித்தாடப்படும் வறக்காவல்லகேன, முத்துமெனிக்காவால் உரித்தாடப்படும் வறக்காவல்லகெ‍ன ; தெற்கு-கே. சிறுலையால் உரித்தாடப்படும் அலியவத்துனவத்த, ஆர். எம். கிரிபண்டாவால் உரித்தாடப்படும் ககலகலாவத்த, முடியால் தீர்த்துக் கொடுக்கப்பட்ட ககலகலாவபத்தன (பி. ப. 8,145/6), கன்சபாவ ரோட்டு, உரிமைப்படம் 123,387 ல் உரித்தாடப்படும் நிலம், டுல்முறெ கிராமத்தின் எல்லை ; மேற்கு-ஆர். எம். பி. எல். கோபாலசாமியால் உரித்தாடப்படும் வீன்கொல்லகேன.

---

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நி. 752 (கண்டி).

இதனோடிணைந்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சொந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1934 ம் ஹு (எப்றில்) சித்திரைமீ 12 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1934 ம் ஹு (மார்ச்) பங்குனிமீ 16 ந் தேதியிலன்று கண்டிக் கச்சேரியிற் கொடுக்கப்பட்டது.

டீ. சீ. ஆர். குணவர்தன,
உதவி அரசாட்சி ஏஜன்ற், கண்டி.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் மத்திய மாகாணம் அரசாட்சி ஏசண்டவர்களிடமும் அவைகளின் அளவைப் படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நிலஅளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக் கொள்ளலாம்.

(b) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

மத்திய மாகாணம், கண்டி டிஸ்திறிக், பாததும்பற பகுதி, பலிஸ்பத்து மேற்கு-கோறளையிலுள்ள நாறன்பனுவ என்னுங் கிராமத்திலுள்ள பின்வருங் காணித்துண்டுகள் :—

பிரதமபடம் இல. 8,297.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 1 | பஞ்சனியகேன (எலாவோடு சேமித்தது). | 0 0 3 |
| 2 | பஞ்சனியகேன .. .. | 0 0 8 |
| 3 | பஞ்சனியகேன (டி. ஆர். சி. ரோட்டோடு சேமித்தது) .. | 0 1 17 |
| 4 | ஷை ( ஷை ) | 0 0 20 |
| 8 | ஷை (அமுனேஎலாவோடு சேமித்தது) .. | 0 0 22 |
| | | 0 2 30 |

எல்லைகள் : வடக்கே-ரோட்டு, எலா, கன்சபாவ பாதை, உக்குமெனிக்கா உரித்தாடும் கொலொனககேனவத்த; கிழக்கு-கன்சபாவபாதை, முடியால் விற்கப்பட்ட பஞ்சனியகேன (பி. ப. 8,297/5), றன்மெனிக்காவாலும் பிறராலும் உரித்தாடப்படும் கடவககெகென, முடியால் விற்கப்பட்ட பஞ்சனியகென (பி. ப. 8,297/6) ; தெற்கு-முடியால் விற்கப்பட்ட பஞ்சனியகென (பி. ப. 8,297/6), முடி உரித்தாடும் பஞ்சனியகென (8,297 /7A) ; மேற்கே-அமுனெஎலா.

## அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வீரபில கிரிந்தை ரோட்டில் பயங்கரமான முடக்கு திருத்தம் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல A 153. குறிச்சி—திகவை தெற்கு.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | மோளவத்தை அல்லது ராசபங்களாவத்தை | தோட்டம், தென்னை பனை மரங்கள் உள்ள | திகவை கனகராசா நீலாச்சி அம்மாள் | 0 0 5·6 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1934 ம் ஸ்ரீ வைகாசி மாசம் 19 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு திகவை வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

அம்பாந்தோட்டைக் கச்சேரி,
1934 ம் ஸ்ரீ சித்திரை மீ 10 ந் திகதி.

எவ் லீச்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கடவலகெதற-வித்திக்குலே ரோட்டிற்கு ஒரு கற்குழிக்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

2,240 ம் இலக்கக் கிராமப்படத்த 1 ம் முற்பிரதி. குறிச்சி—வடமேல் மாகாணத்தில் குருணாக்கல் டிஸ்திறிக்கில் தேவமெதி ஹறபத்துவில் திசவ கோறளையில் உள்ள தொறபாவில.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 25E | பொறலுவலெவன்யாய . | சேன .. | கடவலகெதறவைச்சேர்ந்த ஆர். எம். ஹெறத்வண்டாவும் 13 பேரும் | 0 1 39·9 |
| 25F | ஷை .. | சேன .. | ஷை .. .. . | 0 0 3·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934 ம் ஸ்ரீ மே (வைகாசி) மாசம் 15 ந் தேதியிலன்று காலை 10.30 மணிக்கு ஹொற்றிப்பொல வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருணாக்கல் கச்சேரி,
1934 ம் ஸ்ரீ (ஏப்பிறல்) சித்திரை மீ 11 ந் உ.

டி. பி. செனவிறத்ன,
உதவி அரசாட்சி ஏசண்டு, குருணாக்கல்.

---

## உத்தியோக சம்பந்தமில்லாதவரின் அறிவித்தல்.

இதனால் சகலரு மறிக, காலிப் பகுதியிலுள்ள உக்குவத்தை வாசியாகிய முல்லகே விதானலாகே லௌனேரிஸ் ஆகிய நான் 1907 ம் ஆண்டின் 1 ம் கட்டளைச் சட்டத்தின்1 ம் பிரிவின் 1 B யாகிய ஜாபிதாவின்படி (In terms of rule (1) of the Shedule 1B to the Ordinance No. 1 of 1907) இன்னும் 3 மாசத்தின்பின் கேகாலைப் பகுதியில ஓர் சிங்கள பிரசித்த நொத்தாரிஸ் ஆகக் கடமை பார்க்கவும் பதியப்படவும் அரசினர் பதிவுக் கந்தோர்த் தலைவருக்கு விண்ணப்பம் அனுப்ப இருக்கிறேன் என்பதை அறிவிக்கிறேன்.

உக்குவத்தை,
1934 ம் ஸ்ரீ சித்திரை மீ 3 ந் உ.

எம். வீ. லௌனேரிஸ்

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.